**இந்து சமய அறநிலையத் துறை**

அனுப்புநர்

ஆணையர்,
சென்னை-34

பெறுநர்

அனைத்து இணை ஆணையர்கள்,
இந்து சமய அறநிலையத்துறை.

ந.க.எண். 57365/2021 /எம் 2 நாள்.27.08.2021

அய்யா,

பொருள்: நிலங்கள் பிரிவு – 'கலைஞர் தல மரக்கன்றுகள் நடும் திட்டம்' – வனத்துறை மூலம் மரக்கன்றுகள் பெறுதல் – தொடர்பாக.

பார்வை: 1. ஆணையர், செ.மு.ந.க.58398/2020/பி1 நாள்.09.08.2021
2. முதன்மை வனப்பாதுகாவலர் J1 / 30166 / 2021 / நாள் 17.08.2021.

---

திருக்கோயில் வளாகங்களில் திருக்கோயில் தல மரக்கன்றுகளை நட்டு பராமரிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் "கலைஞர் தல மரக்கன்றுகள் நடும் திட்டத்தின்" தொடக்கமாக முதல் மரக்கன்றை இந்து சமய அறநிலையத்துறை தலைமையிட வளாகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 07.08.2021 அன்று நட்டு தொடங்கி வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள, இடவசதியுள்ள முக்கியத் திருக்கோயில்களின் பிரகாரங்கள், வளாகம் மற்றும் நந்தவனங்களில் ஒரு இலட்சம் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்தும் வண்ணம் வனத்துறை வசம் 13 மண்டலங்களில் உள்ள மரக்கன்றுகள் மற்றும் மரப்பண்ணை (Nursery) அலுவலக விவரங்கள் பார்வைக் குறிப்பு-2ன் மூலம் பெறப்பட்டுள்ளது. அனைத்து மண்டல இணை ஆணையர்களும், இணைப்பில் உள்ள மரப்பண்ணைகளை அணுகி ஒரு மண்டலத்திற்கு தங்களது தேவைக்கேற்ப குறைந்த பட்சம் 5000 மரக்கன்றுகள் என்ற எண்ணிக்கையில் 20 மண்டலங்களுக்கு ஒரு இலட்சம் மரக்கன்றுகள் பெற்றிடவும், மரப்பண்ணை இல்லாத இதர மண்டலங்களை சேர்ந்த இணை

Verified © RealEstate ™

ஆணையர்கள் தங்களுக்கு அருகாமையில் உள்ள மரப்பண்ணை மண்டலங்களை தேர்வு செய்து மரக்கன்றுகளை பெற்றிட அறிவுறுத்தப்படுகிறது.

மரக்கன்றுகளை ஒரு திருக்கோயிலுக்கு 2 அல்லது 3 வீதம் அதிக எண்ணிக்கையிலான திருக்கோயில்களில் நடவு செய்யவும் அறிவுறுத்தப்படுகிறது.

அனைத்து மண்டல இணை ஆணையர்களும் தங்கள் சரகம் இடவசதி உள்ள திருக்கோயில்களில் இடங்களை தேர்வு செய்து தேவைப்படும் மரக்கன்றுகளை பெற்று, நடவு செய்து, பாதுகாப்பு வேலி/பின்னல் வலைவேலி அமைத்து கலைஞர் தலமரக்கன்று திட்டத்தின் கீழ் நடப்பட்டது என்ற பலகை வைக்கப்பட வேண்டும்.

தலமரக்கன்றுகள் நட்டு முடித்த பின்னர் மண்டல வாரியாக திருக்கோயில் பெயர், மரக்கன்று நடப்பட்ட நாள் விவரத்துடன் புகைப்படங்கள் எடுத்து ஆல்பம் மற்றும் மின்னஞ்சலில் புகைப்படங்களுடன், கீழ்க்கண்ட படிவத்தின்படி அறிக்கை அனுப்ப கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**<u>கலைஞர் தல மரக்கன்றுகள் நடும் திட்டம்</u>**

| வ. எண் | திருக்கோயில் பெயர் | இணை ஆணையர் மண்டலம் | நடப்பட்டுள்ள மரங்கள் பெயர் (ம) எண்ணிக்கை விவரம் | மரக்கன்று நடப்பட்ட இடம் | மரப்பதிவேட்டில் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | | | | | |

ஒம்/–ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

/உ.ந.உ.ப/

27/8/21
கூடுதல் ஆணையர் (விசாரணை)

27/08/2021

இணைப்பு – 2

Verified RedEstate

# 'கலைஞர் தல மரக்கன்றுகள் நடும் திட்டம்' – நிலையான செயல்முறை வழிகாட்டிகள்

## இடத்தேர்வு மற்றும் வசதிகள்

1. தல மரக்கன்றுகள் நடுவதற்கு தகுதியான இடத்தை தேர்வு செய்ய வேண்டும்.
2. அந்த இடத்தை மட்டப்படுத்தி ஆழமாக உழவு செய்து மண்ணை இலகுவாக்க வேண்டும்.
3. தேர்வு செய்யப்பட்ட இடம் பாதுகாப்பு வேலியோ (அ) சுற்றுச்சுவரோ இல்லாதிருப்பின், பார்வையாளர்கள் பார்க்கும் வண்ணம் அழகான பின்னல் வலைவேலி 5 அடி உயரத்தில் அமைக்க வேண்டும்.
4. மரக்கன்றுகளுக்கு நீர் விடுவதற்கு ஏதுவாக தண்ணீர் குழாய்களை அமைத்துக்கொள்ள வேண்டும். அதிகமான பரப்பாக இருப்பின் சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்தலாம்.

## மரக்கன்றுகளை நட்டுக் குழிகளை தயாரித்தல்

1. 15 அடி முதல் 20 அடி இடைவெளியில் கன்றுகளை நடுவதற்கு ஏதுவாக கட்டங்களாக குறியீடு செய்துக்கொள்ள வேண்டும்.
2. குறியீடு செய்யப்பட்ட இடங்களில் 2' x 2' x 2' அளவில் மரம் நடுவதற்கு குழி அமைக்கப்பட வேண்டும்.தோண்டப்பட்ட குழியினை இரண்டு வார காலத்திற்கு திறந்தபடியே காற்றோட்டமாக வைத்திருக்க வேண்டும்.
3. அதன் பின்னர் தோண்டப்பட்ட குழிகளில் வண்டல் மண், செம்மண், பண்ணை உரங்களை சம அளவில் கலந்து குழிகளில் நிரப்ப வேண்டும்.
4. தல மரக்கன்றுகளை ஆய்வு செய்து 7 அடி உயரத்திற்கு குறையாமல் மரக்கன்றுகளை பெற்று நடப்பட வேண்டும்.
5. கன்றுகள் நடப்பட்டவுடன் மண்புழு உரம்,வேம்பு, அசோஸ்பைரிலம் மற்றும் பாஸ்பொபேக்டீரியா கலந்து குழியின் மேற்பரப்பில் போட வேண்டும்.

Verified © RedEstate ™

6. தேவையான அளவுக்கு நீரை விடும்போது 1 மீட்டர் விட்டத்திற்கு மண்ணை வெட்டி அரையடி ஆழம் நீர் தேங்கும் வகையில் தடுப்பணை அமைக்க வேண்டும்.
7. குழியில் செடியின் அருகில் தாய் மண் பாதிக்காத வகையில் 8 அடி உயர சவுக்கு கம்பை 1.5 அடி ஆழத்திற்கு மண்ணிற்குள் செலுத்தி மேல்பாகத்தை செடியோடு மக்கும் தன்மையுள்ள கயிற்றால் தளர்வாக இரண்டு இடங்களில் கட்ட வேண்டும்.
8. குழிகளில் நீர் விரைவில் ஆவியாகாவண்ணம் தேங்காய் நார்த்தூளைத் தூவி விடவேண்டும்.
9. மரம் நட்டதிலிருந்து ஆறு மாதத்திற்கு மழையில்லா காலங்களில் ஒருநாள் விட்டு ஒருநாள் தண்ணீர் ஊற்ற வேண்டும். ஆறுமாதத்திற்குப் பிறகு வாரம் ஒருநாள் தண்ணீர் விட வேண்டும்.
10. ஏதோ ஒரு காரணத்தால் மரக்கன்று பாதிக்கப்பட்டிருப்பின், மாற்றாக நடுவதற்கு ஏதுவாக ஒவ்வொரு வகை மரங்களிலும் இரண்டு கூடுதல் மரக்கன்றுகளைப் பராமரித்து தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.
11. மேற்கண்ட பணிகள் யாவும் கோயில் பணியாளர்கள் மூலம் செயல்படுத்த வேண்டும்.
12. ஒவ்வொரு கோயிலுக்கும் ஏற்கனவே உள்ள பழைய மரங்களையும் தற்போது நடப்படும் மரக்கன்றுகளையும் தனியே பதியப்பட்டு மரங்கள் பதிவேடு பேணப்பட வேண்டும்.
13. மரக்கன்றுகள் நட்டு முடிந்த பின்னர் மண்டல வாரியாக திருக்கோயில்கள் பெயர் நடப்பட்ட நாள் விவரத்துடன் புகைப்பட ஆல்பம் தயாரித்து soft copy உடன் அலுவலகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

Verified RealEstate™